செ.வெ.எண்: 33 நாள்: 12.01.2017

# பத்திரிக்கைச் செய்தி

தமிழகத்திலுள்ள பொதுவிநியோகத் திட்ட நியாயவிலைக் கடைகளில் பொங்கல் பண்டிகையை முன்னிட்டு சிறப்பு பொங்கல் பரிசு தொகுப்பு வழங்கும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தமிழகத்திலுள்ள பொதுவிநியோகத் திட்ட நியாவிலைக் கடைகளுக்கு எதிர்வரும் 13.01.2017 அன்று, பிரதி மாதத்தின் இரண்டாம் வெள்ளிக்கிழமை என்ற முறையில் விடுமுறை நாளாகும் என்றும், ஆனால் பொங்கல் பண்டிகையை முன்னிட்டு குடும்ப அட்டைதாரர்களுக்கு பொங்கல் சிறப்பு பரிசுத் தொகுப்பு வழங்கும் பணியை செய்ய வேண்டியிருப்பதால் 13.01.2017 அன்று நியாயவிலைக் கடைகளுக்கு வேலை நாளாக அறிவிக்கப்பட்டுள்ளது. அதற்கு பதிலாக சனவரி 2017 ம் மாதத்தில் 16.01.2017 அன்று நியாயவிலைக்கடைகளுக்கு விடுமுறை நாளாகும் என்று மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**